Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 241/2020 PW-8**

Name : கவின்ராஜ்
Father / Husband name : நாச்சிமுத்து
Village : திருப்பூர்
Age : 41
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 13.02.2026

Accused absent. Both side counsel present.
Petition u/s 317 CrPC filed and allowed. ( Witness appeard through VC from Trippur District Court Complex )

**முதல் விசாரணை**

1. நான் தற்போது திருப்பூர் மாவட்டம் போக்குவரத்துதுறையில் மோட்டார் வாகன ஆய்வாளராக பணியிலிருக்கிறேன். கடந்த 06.11.2019 அன்று காலை 08.35 மணியளவில் திண்டிவனம் வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளராக பணியிலிருந்தபோது TN 10 AJ 5835 LMV காரை ஒலக்கூர் காவல் நிலைய உதவி ஆய்வாளரின் வேண்டுகோளின்பேரில் எங்கள் அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தேன். மேற்படி வாகனத்தின் உரிமையாளர் செழியன், ஓட்டுநர் தனசேகரன் எனத்தெரிந்துகொண்டேன். வாகனத்திற்கு காப்புறுதி ஆவணம் இருந்தது. மேற்படி வாகனத்தின் முன்பக்கம் பல்வேறு சேதங்கள் காணப்பட்டது. வாகனம் இயந்திரக்கோளாரால் விபத்து ஏற்படவில்லை என்று சான்று வழங்கினேன். **TN 10 AJ 5835 LMV காரின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்னர் 07.11.2019 அன்று காலை 08.55 மணியளவில் திண்டிவனம் வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளராக பணியிலிருந்தபோது TN 69 S 6383 லாரியை ஒலக்கூர் காவல் நிலைய உதவி ஆய்வாளரின் வேண்டுகோளின்பேரில் எங்கள் அலுவலகத்தில் வைத்து

ஆய்வு செய்தேன். மேற்படி வாகனத்தின் உரிமையாளர் குப்புசாமி, ஓட்டுநர் சிவக்குமார் எனத்தெரிந்துகொண்டேன். வாகனத்திற்கு காப்புறுதி ஆவணம் மற்றும் பர்மிட் இருந்தது. ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது. மேற்படி வாகனத்தின் முன்பக்கம் மற்றும் பின்பக்கத்தில் வலது புறத்தில் பல்வேறு சேதங்கள் காணப்பட்டது. வாகனம் இயந்திரக்கோளாறால் விபத்து ஏற்படவில்லை என்று சான்று வழங்கினேன். **TN 69 S 6383 லாரியை மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்து நடந்து 10 நாட்கள் கழித்து தான் வாகனங்கள் ஆய்விற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். இடைப்பட்டக்காலத்தில் அந்த வாகனங்களுக்கு வேறு சேதம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் காவல் துறையினர் பொறுப்பில் வாகனங்கள் இருந்தால் வாய்ப்பில்லை. வாகனங்கள் காவல் நிலைய பொறுப்பில் இருந்தது என்று ஆவணம் எதாவது என்னிடம் கொடுத்தார்களா என்றால் இல்லை. என்னிடம் வேண்டுகோள் கடிதம் மட்டும் கொடுத்தார்களா என்றால் வேண்டுகோள் கடிதத்துடன் வாகனத்தின் ஆவணங்களை கொடுத்தார்கள். வாகனத்தின் ஆவணங்களை எங்கள் அலுவலகத்திலுள்ள ஆவணங்களுடன் சரிபார்த்துள்ளேனா என்றால் பார்த்தேன், சரியாக இருந்தது. வாகனத்தை நான் நேரில் ஆய்வு செய்தேனா அல்லது எனக்கு கீழ் பணிபுரியும் வேறுயாராவது ஆய்வு செய்தார்களா என்றால் நான் தான் ஆய்வு செய்தேன். லாரியின் பின்பக்கத்தில் மர்க்காடு சேதமாகி இருந்தது என்றால் சரிதான், அதனுடன் Leaf Spring cama out என்ற சேதமும் இருந்தது. லாரியின் பின்பக்கம் சேதம் குறித்து காரணங்களை சொல்லியுள்ளேனா என்றால் விபத்தினால் சேதம் ஆனது என்று சொல்லியுள்ளேன். லாரியின் பின்பக்கம் விபத்து ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. லாரியின் பின்பக்கம் ஏற்பட்ட விபத்தினால் சேதம் ஏற்பட்டது என்றால் சரிதான், முன்பக்க பம்பரிலும் சேதம்

உள்ளது. எவ்வளவு நேரம் வாகனத்தை ஆய்வு செய்தேன் என்றால் சுமார் 10 நிமிடம் ஆய்வு செய்தேன். லாரியை ஓட்டி பார்த்து சோதனை செய்தேனா என்றால் இல்லை, லாரி ஓட்டி பார்க்கும் நிலையில் இல்லை. வாகனத்தை எங்கள் அலுவலத்திற்கு எப்படி எடுத்து வந்தார்கள் என்றால் ரெக்கவரி வேன் மூலம் எடுத்துவந்தார்கள். அதனை நான் நேரில் பார்த்தேனா என்றால் பார்த்தேன். மீண்டும் சோதனை முடிந்து ரெக்கவரி வேன் மூலம் எடுத்துச்சென்றார்களா என்றால் தெரியாது.

2. காரில் முன்பக்கம் மட்டும் சேதம் இருந்தது என்றால் சரிதான். காரில் வேறு பக்கம் சேதம் இல்லை என்றால் முன்பக்கம் மர்க்காடு வரையும், டாப் கூடு வரை சேதம் இருந்தது. பின்பக்கம் மற்றும் சைடில் சேதம் இருந்ததா என்றால் இல்லை. காரின் முன்பக்கக்கண்ணாடியில் சேதம் இருந்ததா என்றால் சேதம் இருந்தது. அதனை அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. காரையும் ரெக்கவரி வேன் மூலம் எடுத்துவந்தார்கள் என்றால் தெரியாது. நான் வாகனங்களை சரிவர ஆய்வு செய்யவில்லை, அறிக்கையில் குறைபாடு உள்ளது என்றால் சரியல்ல. அலுவலகத்தில் ஒரே பல வாகனங்கள் வருவதால் நான் மேற்படி வாகனங்களை ஆய்வு செய்யவில்லை, எனக்கு கீழ் பணிபுரிபவர் ஆய்வு செய்தார்கள் என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.